**செய்தி வெளியீடு எண்: 605** **நாள்:18.09.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

# மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களின் தலைமையில் இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் இரண்டாவது ஆலோசனைக் குழுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் இன்று (18.09.2019) நடைபெற்றது

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களின் தலைமையில் இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் இரண்டாவது ஆலோசனைக் குழுக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று (18.09.2019) பள்ளிக் கல்வித் துறை கூட்டரங்கில் நடைபெற்றது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு தீரஜ் குமார், இ.ஆ.ப. அவர்கள் இக்கூட்டத்திற்கு முன்னிலை வகித்தார். மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலைமை வகித்து பேசுகையில், இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் இரண்டாவது ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற குழு உறுப்பினர்களை வரவேற்கிறேன். இக்குழுவில் உறுப்பினராக உள்ள பல்கலைக் கழகம், தொழில் நிறுவனங்கள் மற்றும் பல்வேறு நிலையில் உள்ள நீங்கள் தங்களுடைய பங்களிப்பாக நீங்கள் இருக்கும் பகுதிகளில் எவ்வாறு பல்வேறு வகைகளில் சமுதாயத்திற்கு உதவி செய்கிறீர்கள் என்பதை பிறர் சொல்லக் கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு அரசு, இந்தியாவில் சிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனைகளை உருவாக்குவதற்கு பல்வேறு அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு மறைந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி தந்துள்ளார்கள். அந்த வழியில் செயல்படுகிற தமிழக அரசு, விளையாட்டு வீரர்களை மேலும் ஊக்குவிப்பதற்கு உண்டான அனைத்து வழிமுறைகளை கண்டறிந்து அதற்கேற்ப செயல்பட்டு வருகிறது என்பதை இத்தருணத்தில் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்கீழ் 37 இலட்சம் அறிக்கை அட்டைகள் தற்போது பள்ளிகளுக்கு விரைவில் அனுப்பப்பட உள்ளது. இத்திட்டத்தில் 6, 7, 8 ஆகிய வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் உடல்திறன் மற்றும் எந்த விளையாட்டில் ஈடுபாடு உள்ளது என்பதை கண்டறிய இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் உள்ள 12,524 கிராம பஞ்சாயத்துக்களிலும், 528

பேரூராட்சிகளிலும் விளையாட்டுக்குழு அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ், விளையாட்டுத் திடல் கண்டறிவது, 15 வயது முதல் 35 வயது வரை உள்ள இளைஞர்கள் (இருபாலரும்) குழுவில் உறுப்பினராக சேர்க்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டம் கிராம அளவில் விளையாட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையுள்ளது. மேலும், விளையாட்டில் கிராம அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில், தேசிய அளவில் மற்றும் சர்வதேச அளவில் பங்குகொள்வதற்கு ஏதுவாக விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு அரசு பல்வேறு உதவிகளைச் செய்து ஊக்கப்படுத்தி வருகிறது. அதில் ஒரு கட்டமாகத்தான் விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு 3 சதவிகிதம் வேலைவாய்ப்பிற்கான இடஒதுக்கீடு செய்து தமிழக அரசு மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக விளங்குகிறது. இந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு நல்ல ஆலோசனைகளை வழங்கியுள்ளீர்கள். நீங்கள் தெரிவித்த கருத்துரைகள் எல்லாம் அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்று இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கூட்டத்தில் திரு பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப. (ஓய்வு), வேலம்மாள், வேல்ஸ் பல்கலைக் கழகம், வி.ஐ.டி. பல்கலைக் கழகம், சத்யபாமா பல்கலைக் கழகம், இராமச்சந்திரா பல்கலைக் கழகம் மற்றும் தொழில் நிறுவனங்களைச் சார்ந்த ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் கல்வியாளர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**